வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஞு
கார்த்திகை கஎஉ வியாழக்கிழமை

## சமாதானப் பேச்சு நிசமல்லவாம்

வத்திக்கான் மூலமாக யுத்த சமாதானப் பேச்சு நடக்கின்றதென்றும், ஆனதால் ஒருபோது இக்கொடிய நீடித்த யுத்தம் நின்றுவிட, சமாதானம் உலகத்தில் ஏற்படுதலுங் கூடுமென்றும் இற்றைக்கு இரண்டு தினங்கட்கு முன் இங்குள்ள மக்களெல்லாம் எண்ணி மன ஆறுதல் அடைந்திருந்தார்கள்; ஆனல் சமாதானப் பேச்சு நிகழ்கின்றதெனப் பிறந்த செய்தி நிசமல்லவென்பது நேற்றின்று வந்த தந்திச்சமாசாரங்களைக் கொண்டு அறியக் கிடக்கின்றது; இன்னும் யுத்த விவகாரங்களை உற்று ஆராயப் புகுமிடத்து இப்போதைக்கு இல்லையேல் இந்த ஆண்டு முடிவதற்கிடையில், அடுத்த ஆண்டின் முற்பகுதியிற்றானும் யுத்த சமாதானம் உண்டாகுமோ என்பது சந்தேகத்திற் கிடமாகவிருக்கின்றது. ஐக்கிய ராச்சியத்தினர் ஹிட்லரே பெரிய அபராதியென்றும் அவரும் அவருடைய கட்சியினருமே இந்த யுத்தத்தைத் தொடக்கி உலகத்திற பெரிய அனர்த்தங்களையெல்லாம் ஆக்கிவிட்டனரென்றும், ஆனதால அவர்கள் பிடித்த நாடுகளையெல்லாந் திருப்பிப் பிடித்து அவர்களையும் நிர்மூலமாக்கப் புதிய ஜர்மனியரை மூளைக்கச் செய்தாலொழிய உலகத்தில ஒருபோதும சமாதானம உண்டாகப் போவதில்லையென்றும் அபிப்பிராயப்படுகின்றனர்.

இனி, ஹிட்லரின் நோக்கமென்ன என்பதை ஆராய்வோம். சென்ற நவம்பர்மாசம 20ந் தேதி ஹிட்லர் இருபதிஞயிரமென்னுந் தொகை கொண்ட ஜர்மனிய உத்தியோகத்தர்கள சமுகத்தில தமமுடைய நோக்கத்தைப் பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார்:—

“பிருத்தானியர் யூதர்களுடைய தூண்டுதலுக்கிசைந்து ருஷியருடன் சேர்ந்து கொண்டு ஜர்மனியராகிய எங்களை நாசமாக்கிவிடலாமென்ற நோக்கத்தோடு தான் இந்த யுத்தத்தைத் தொடங்கியுள்ளனர்; இப்படிச் செய்து, தாங்கள் முந்திச் செய்து வந்த விதமாக, அயிரோப்பாக் கண்டத்திலே ஒரு இராச்சியத்தை மற்றை இராச்சியம விஞ்சவிடாமல் தடுத்துவிடலாமென்று பிருத்தானியர் நினைத்துக்கொண்டார்கள். அயிரோப்பாக் கண்டத்தை யூதசாதியாருடன் சேர்ந்து அடக்கியாண்டுவிடலாமெனப் பிருத்தானியர் 150 வருடகாலமாக முயற்சி செய்துவருகின்றனர். ஜர்மனியர் இந்த யுத்தத்திலே வெற்றியடையத் தவறினால் ஜர்மனியும் அயிரோப்பாக் கண்டத்திலுள்ள ஏனையநாடுகளும் பல வகையான அனர்த்தங்களுக்கு இடங்களாய் முடியும். இந்தச் சமரிலே தோல்வியுறுஞ்சாதியினர் பிறகு உலகிற் சஞ்சரிக்கப் போவதில்லையெனலாம். இந்த யுத்தத்திலே ஒன்றில் வெற்றியடைதல், இல்லையேல் நாசமுறுதல் என்னுமிவற்றைத் தவிர வேறு ஏதும் பயன் விளையுமெனக் காத்திருத்தல் பைத்தியமாகும். ஆனதால் ஜர்மனியர் ஒவ்வொருவரும் தமக்கு வெற்றி கிடைக்குமென்ற ஊக்கத்தோடுதான் சமர் புரிய வேண்டும்; ஜர்மனியரிடத்திற் படைவலி பொருள்வலி யிரண்டும் இன்னமும் உண்டு...”

இந்த எண்ணங்கொண்டு இப்பொழுதும் ஹிட்லர் நிற்பதாயிருந்தால், இப்போதைக்குச் சமாதானம் வருமெனக் காத்திருத்தல் அசாத்தியமாகாதா? இனி ஜப்பானிய அதிகாரியாகிய தொஜோ அயிரோப்பிய அதிகாரிகளைப் போலக் காலத்திற்குக் காலம் அதிகம் பேசுவதின்றித் தம் கருமத்திலேயே கண்ணாக இருக்கின்றனரெனத் தந்திச் சமாசாரங்களைக்கொண்டு அறியக்கிடக்கின்றது. மேலும் றூஸ்வெல்ற், ஸ்ராலின், சேர்ச்சில் என்னும் பெரிய மூவரும, இவர்களுடன் சீன சேனாபதியாகிய செயாங்-காய்-ஷெய்க் என்பவருங்கெயிரோநகரிற் கூட்டங்கூடி யுள்ளாரென ஆதாரமற்ற சமாசாரம் பிறந்துளளது. இவைகளையெல்லாம உத்தேசிக்கும்போது இப்போதைக்குச் சமாதானம் உண்டாதற்கு இடமெங்கே யென்று நாம சிந்திக்கவேண்டும. அல்லாமலும் இந்தயுத்தத்தை மனுஷர் தொடங்கினராயினும் இதுதெய்வத்தின் சம்மதமில்லாமல தொடக்கப்பட்டதல்ல வென நாம் சிந்திக்கவேண்டியிருக்கின்றது அயிரோப்பாக் கண்டத்திலும் உலகத்தின் ஏனைய பாகங்களிலுமுள்ள துஷ்டரை நிக்கிரகஞ் செய்து சிஷ்டரைப் பரிபாலித்தற்காக எல்லாம் வல்ல இறைவனே இந்தப் பெரும்போரை மூட்டிவிட்டான்; அந்தக்கருமம முடியவே இந்தயுத்தமும முடியுமென நாம் எங்களளவிற சமாதானஞ் சொல்லிக்கொளவதே செய்யத்தக்கன.

## இலங்கையின் க்ஷயரோகத் தடைவேலை

### விருத்தி செய்வது பற்றி யோசிக்க மற்றொரு மகாநாடு

இலங்கையில க்ஷயரோகத் தடை வேலையை எவ்விதம் விருத்தி செய்வதென்று ஆலோசிக்கும் பொருட்டுச் சுகாதாரமந்திரி மிஸ்றர். ஜோர்ஜ். ஈ. டி. சில்வா வியாழக்கிழமை ஒரு மகாநாடுகூட்டுவார். தனிப்பட்ட முறையில் வைத்தியத் தொழில நடத்துபவர்களும் இம் மகாநாட்டுக் கழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இதற்குமுன்னர் நடைபெற்ற மகாநாட்டிற்கு வைத்திய சுகாதார டைரெக்டர், உதவி டைரெக்டர், க்ஷயரோக வேலையில ஈடுபட்டுள்ள பகுதி வைத்திய அதிகாரிகள் ஆகியோர்மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம், காலி, கோட்டை ஆகிய மூன்று பகுதிகளில் திட்டம ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் சமீபத்தில இந்தியாவிற பயிற்சி பெற்ற வைத்திய அதிகாரிகள் மூவரும குறித்த வேலையை நடத்தி வருவதாகவுஞ் சொல்லப்படுகிறது. இப்பொழுது இவ்வதிகாரிகள் குறித்த பகுதிகளின க்ஷயரோகநிலைமையைப் பரிசீலனை செய்து வருகின்றனர்.

# உலகம்பலவிதக் கதை

முற்றொடர்.

### “ஓடும் புளியம்பழமும் போல்”

“ஐயா, சின்னம்மா சுகமா” என்று என் மகள் கேட்க, அவள் சுகமேயிருக்கிறாள், ஆனல் நாளைக் காலை தான் இங்கே வரவேண்டுமென்றும் தன்னை இங்கே கூட்டிக் கொண்டு வரும்படியும் அவள் எனக்குச் சொன்னாள் என்றேன்; “அப்படியே செய்யுங்கள் ஐயா, சின்னம்மாளைக் கண்டு வெகுநாள்” என்றாள் என் மகள்; நான் அடுத்த நாட்காலை போகவில்லை; அன்று பிற்பகல் போய் அவளைக் கூட்டிக் கொண்டு வந்து என் வீட்டிற்சேர்த்தேன்; வந்தநாள் தொடக்கம் என் மீதும் என் பிள்ளைமீதும் அவள் முன்னரைக் காட்டிலும் அதிக அன்பு பாராட்டி வந்தாள்; வஞ்சகமற்றவளாகிய என் மகளும் சிறியதாயிடத்து விசுவாசமாக நடந்துவந்தாள்; நான் சிங்காரி விஷயத்தில் அறிந்தும் அறியான் போல, ஓடும் புளியம்பழமும் போல, நடந்து வந்தேன்; இப்படியாக ஒருநாட் பகல் நான் எங்கோ கருமார்த்தமாகப் போய்விட்டு அன்று இரவு மீண்டு வீட்டிற்கு வந்தேன்; அன்றிரவு என் மகளே எனக்குப் போசனம் பரிமாறினாள்; அப்பொழுது என் பிள்ளை சிறிது கவலையோடிருப்பதை நான் அவதானித்து, கண்ணே, உனக்கு என்னடியம்மா கவலை என்று மெல்லக் கேட்டேன்; “ஒரு கவலையுமில்லை ஐயா” என்று மகள்சொல்லி அதிக கவலைப்பட்டாள்; இல்லைபடி யம்மா, பயப்படாமற் சொல்லு; எனக்குச் சொல்லாமல் வேறு யாருக்கு நீ முறையிடுவது என்று பரிவுடன மீட்டுங் கேட்டேன்; “ஐயா, நீங்கள் சின்னம்மாவை ஒன்றுங் கேளாதீர்கள்; இன்று மத்தியானம் இங்கே யொருவன் வந்தான்; கருக்றமுடையவன்; செங்கண்ணன்; பெருத்த தோற்றமுள்ளவன்; மீசை விட்டவன்; என் சின்னம்மாவை அக்கா, அக்கா என்று விளித்தான; வெகு நேரமாகத் தலைவாசற்பக்கத்திற சின்னம்மாவோடு பேசிக்கொண்டிருந்தான்; சின்னம்மாவை தலைவாசலில் இருந்துகொண்டு என்னைக் கூப்பிட நான் அங்கே போனேன; அவன் இருக்கக் கண்டு கதவண்டை நின்றுகொண்டு என்ன சின்னம்மா என்று கேட்டேன; தங்கைச்சி இங்கே வாவம், இவர் புறத்தியல்ல, எனக்குத் தம்பி, ஆனதால் உனக்கு மாமா என்று என்னைத் தலைவாசற்பக்கம் வரச் சொல்ல நான அச்சத்தினாலும நாணத்தினாலும் அங்கே போகாமற் சிறிதுநேரம கதவண்டையிற்றானே நின்றுவிட்டுப் பின்னர் மீண்டு வந்தேன; இப்படி நான நடந்துகொண்டது சின்னம்மாவுக்குப் பிடிக்கவில்லை; அந்த நேரந்தொடக்கம சின்னம்மாவும என்னுடன் முகங்கொடுத்துப் பேசக்காணேன; இதற்கிடையில அவன் என்னை உற்று உற்றுப் பார்க்க முயன்றான்; அவனுடைய போக்கு வாக்கு நல்லதல்ல ஐயா! இது தான கவலை, ஆனாலும இதைப்பற்றிச் சின்னம்மாவிடம் ஒன்றும பேசவேண்டாம்” என்று என் பிள்ளை மெல்லச் சொல்லி ஆறினாள்; மகளே அவளோடு இதையிட்டுப் பேசிபாவமென்ன; ஆனால், நீ புத்தியாய் நடந்துகொள் என்று சொல்லி நான கவலைப்பட்டேன்; என் பிள்ளையும் அவளும ஒருவீட்டிலிருந்தால் என் பிள்ளைக்குப் பெரும் மோசம் நேரக்கூடுமென்று எண்ணிப் பயந்தேன்; எனக்குத் தாரமொன்றைத் தேடப்போய் என் பிள்ளைக்கு யமனைத் தேடிக் கொண்டுவந்து வீட்டிற் சேர்த்து விட்டேனே என்று என்னையே நான் நொந்தேன்;

### புருஷன் பெயரை மனைவி சொல்லவொண்ணாது

கருமம் அவ்வளவில் நின்றுவிடவில்லை; அவள் என் பிள்ளையை வெறுத்து நடந்தாளேனும் அதனை இயன்றவரையில் எனக்குக் காட்டாமலும் என்னிடத்தில் அதிக அன்பு பாராட்டுவாள் போலவும் நடக்கத் தலைப்பட்டாள். என் பிள்ளை உணவு பரிமாற உண்பதே எனக்குப் பிரியம்; ஆனல் உண்ணப் போகும் நேரமெல்லாம் அவள் தானே முந்திவந்து எனக்குப் போசனம் பரிமாற என்பிள்ளை ஒதுங்கிநின்றுவிடுவாள்; என்மகளை நான் கூப்பிட்டாலும், “என்ன” என்று சொல்லிக்கொண்டு தானே முந்திவந்து என் முன் நிற்பாள். (இதற்கிடையிற் புவனேசுவரி “சாமி, மனைவியைக் கூப்பிட்டால் மனைவி வரவேண்டியது; மகளை யழைத்தால் மகள் வரவேண்டியது, மாறி ஏன் வருவான்” என்று கேட்க, சாமியார் புன்சிரிப்புச் செய்து) அப்படியல்ல குழந்தாய், மனைவி புருஷன் பெயரைச் சொல்லவொண்ணாதென்ற நியதிபோல, எங்கள் நாட்டிலே புருஷனும் மனைவியின் பெயரைச் சொல்வதில்லை; அவர்களுக்கு ஆண்பிள்ளையிருந்தால், புருஷன் தம்பி என்று விளிக்க மனைவி வருவதும், பெண்பிள்ளையானல் தங்கச்சியென்று விளிக்க வருவதும் உண்டு; பிள்ளைப்பாக்கியமில்லாதவர்களாயிருந்தால் புருஷன் மனைவியை “கேளேன” “இங்கே பாரும்” என்று இப்படிக் கூப்பிடுவதுமுண்டு; இந்த நியாயத்தினாற் போலும் சிங்காரியும் என் பிள்ளையைக் கூப்பிட, தன்னை யழைப்பதாக அதனைப் பாவித்து வரத் தலைப்பட்டாள்; இவை கிடக்க, பின்னருஞ் சில நாட்கள் சென்றபின் நான் வீட்டில் இல்லாத சமயத்தில் ஒருநாள் மத்தியானத்தின்மேல் அந்த வீரசிங்கன் எங்கள் வீட்டிற்கு வந்தானென்றும், வந்து தலைவாசலில் இருந்தவனைச் சிங்காரி உள்வீட்டில் அழைத்து இருத்தினாளென்றும், அதனைக் கண்டு என்மகள் அடுக்களைப்பக்கத்திலும் கிணற்றடிப்பக்கத்திலும் ஒதுங்கி நின்றாளென்றும், அப்படி யொதுங்கி நிற்கவும் சிங்காரி என் பிள்ளையைக்கொண்டு தேநீர் வைக்கச்சொல்லி, பிள்ளை வைத்தபின் அதனைக் கொண்டு போய் அவனிடங் கொடுக்கச் சொன்னாளென்றும், சொல்லிய விடத்தில் என் பிள்ளை மறுக்க, அந்தச் சண்டாளி என் மகளை வைது பிடித்துத் தள்ளிவிட என் பிள்ளை சுவரிற் பிடர் தாக்குண்டு வீழ்ந்தாளென்றும் அதனைக் கண்டு தான் ஓடிப்போய் என் பிள்ளையை அணைத்தெடுத்துப் பிடரைத் தடவிக் கண்ணீர் துடைத்து ஆற்றித் தேற்றியதாகவும், இந்தக் கருமத்தைப்பற்றி ஐயாவுக்கு ஒன்றுஞ் சொல்லவேண்டாமென்று தன்னை என் பிள்ளை இரந்ததாகவும் என் பிள்ளைக்குத் துணையாகவுள்ள மனுஷி என்னைத் தனிமையிற்கண்டு சொல்லிவருந்தினாள்; மகளே, புவனம், இப்படிச் சொல்லக் கேட்டவுடனே பெற்ற பாதகனாகிய என்னுடைய மனம் அந்த நேரத்திற் பட்டபாட்டை என்னவென்று சொல்லுவேன; அந்தச் சிங்காரி

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# 'என்னுசை எழுபரவை'

(சி. ஆறுமுகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

ஊழ் யாரைத்தான் விட்டது! நற்பெரும்பான்மை கூட்ட நம்பியாரூரரும் "கைபோதித்திலங்குசெவ்வாய் விற்புரை நுதலின் வேற்கண் விளக்கிழை" யினராம் பரவையாரைக் காண்கின்றார். அக்கணத்திலேயே 'பண்டைவிதி கடைகூட்டப் பரவையாரும்' ஒளிபொளிப்பூண் டாரோனும் நம்பியாரூரரைக் காண்கின்றார். இருகோக்குகளும் ஒன்றுபடுகின்றன. வேட்கை எழுகின்றது. என்னே! தெய்வமணமும், தெய்வ ஒளியும், தெய்வ அழகுங்கொண்ட ஒரு பொருள் என் கண்களுக்குக் காட்சியளிக்கின்றதே! ஆகலான், இது கற்பகத்தின் பூங்கொம்போ? அன்றி, காணுந்தோறும் காண்டொறும் அழகு மிகுகின்றமையால் காமன்றன் பெருவாழ்வோ? அல்லது பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? விற்குவளை பவள மலர் மதிபூத்த விரைக்கொடியோ? அற்புதமோ? சிவனருளோ? அறியேன்! என்று பலவாறு அதிசயித்து நிற்கின்றார் ஆரூரர். என்மனத்தைத் திரித்த இவன், 'ஆயிரகோடி காமர் அழகெலாந் திரண்டொன்றாக மேவின புருடனோ? அன்றி, தன்னேரில்லா மாரனோ? தார்மார் பின் விஞ்சையனோ? மின்னேர்செஞ் சடை யண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ? யாரோ?' என்று பரவையாரும் பலவாறு நினைக்கின்றார். பெருமையிற் சிறந்த நம்பியாரூரிடத்தே கொண்ட எல்லையில்லாத காதல் காரணமாக, பரவையாரின் மனத்துள்ளே வேறொன்றும் புகுதற்கு இடந் தாராவண்ணம் நிறைந்திருந்த நாற்குணங்களும், ஆற்றில் வெள்ளம்வந்தபோது நாணற்புல் சாய்ந்தவாறு போலச் சாய்ந்து அக்காதல் வெள்ளத்திற்கு இடங் கொடுத்தன. அவ்வாறு இடங் கொடுத்தனவாயினும் அக்குணங்கள் அகலாமல் ஒருபுடை சாய்ந்திருந்தன. இத்தருணத்தில் கண்ணுதலைத் தொழுமன்பு பரவையாருக்குக் கைகொடுத்துதவுகின்றது. அவ்வன்பே பற்றுக்கோடாகப் பரவையாரும், 'பூங்கோயிலமர்ந்த பிரான் பொற்கோயில் போய்ப் புகுந்தார்'. பாவம்! நம்பியாரூரர் என செய்வார்? தாங்கண்ட பொற்கொம்பை இன்னதென அறியும் விருப்பாற் றூண்டப்பட்டவராய், "என்மனங்கொண்ட மயிலியலின் இன்றொண்டைச் செங்கனிவாய் இளங்கொடிதான் யார்?" என்று அங்கு நின்றோரை வினவினர். அவர்களும் "அவர் நங்கை பரவையார் சென்றமர்ர் தாதார்க்குஞ் சேர்வரியார்" என்றனர். பரவையார் என்ற திருநாமங் கேட்டதுமே நம்பியாரூரர் கொண்ட மகிழ்வுக்கும் எல்லையுண்டோ! தலைவனுக்குத் தலைவியின் பெயர் கேட்டலும் அதில் ஒரு பெருவிருப்பம் நிகழ்வது அகப்பொருள் உண்மைகளுள் ஒன்றல்லவா!

'ஆகா! என்னாதரைப் பறித்த நங்கையின் பெயர் பரவை. பெரிய தெய்வசபையில் விரும்பப் படுகின்ற திலோத்தமை, ஊர்வசி முதலிய அரம்பையர்கள் எல்லோராலும் துதிக்கத்தக்க தெய்வந்தான் இவள். அன்றியும் முல்லையரும்பை நிகரும் முறுவலினையும், இலகுமியும் விரும்பும் அழகினையுமுடையாள். கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமுடைய இவளது உருவத்தின், இனிய மெல்லிய சாயலின் அழகிய பாப்பிலேபட்ட எனது ஆசை எழுகடல போன்றது', என்றவாறு நம்பியாரூரரின் கனவில் பட்ட பரவை, எங்கள் தெய்வச் சேக்கிழார் அடிகளின் நாவுடைய பட்ட பாட்டைப் பார்ப்போம்.

"பேர்பரவை பெண்மையினில்
பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணி
முறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினாள் திருவுரு
வின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்
னாசை எழுபரவை"

என்னே! பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவல்லுனராம் சேக்கிழார் பெருமான் இத்தூக்கொன்றனுள்ளேயே எழுபரவைகளையும் புகுத்தி இறுதியில எழுபரவை என்று எண்ணிக் கணக்கு மிடுகின்றார்போலும்! இச்சாதுரியத்தை முதலிற் கண்டு மகிழ்ந்தவர் திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்தான. அப்பெருநாவலர் சேக்கிழார் சுவாமிகள்மீது அன்பு கனிந்துருகிப் பாடிய பிள்ளைத்தமிழில் அம்புலிப்பருவத்தில சந்திரனை ஓரே வெருட்டில் வெருட்டிவிடுகிறார். அம்புலீ! நீயோ ஒரு பரவையிடத்து (பாற்கடலைத்து)த்தான் பிறந்தாய். இத்தெய்வச் சேக்கிழாராகிய மழலைச் சிறுதேவனின் ஒருதூக்கில் எழுபரவையும் புகுத்தின வல்லபமுடையான். எனவே நீ விளையாடவா! எனுங் கருத்தமைய "நினையினறதொரு பரவை............ முறையிலொரு சிறுதூக்கினெழுபரவையும் புகமுடித்தற நிறைத்தானிவன மொழிவெங்கடம்பிரான வல்லபமுணர்ந்திலைகொல்" என்று புகழு போயினர். இம்மட்டோ! தெய்வச் சேக்கிழார் சுவாமிகளின் வரிபடப்பட்ட பரவை, எங்கள் சித்தாந்த சாகரம் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் உரையிடைப்பட்ட பாட்டைப் பாருங்கள. (செய்யுளின் பொருள்) பேர்பரவை-இவரதுபேர் நங்கைபரவை; பெண்மையினில்-இவரிடத்துக் காணப்படும் பெண்மைக் குணங்களைக் கூறுமிடத்து; பெரு உம்பர் அவை விரும்பு அல்குலார் பரவு ஐ-பெரிய தேவசபை விரும்புகின்ற திலோத்தமை முதலிய அரம்பையர்களும் துதிக்கத்தக்க தெய்வமாம்; அணிதிகழும் மணிமுறுவல் அரும்பர் அவை—மேல் தொங்கும் மூக்கினணியிலுள்ள முத்துக்களினும் மேம்பட்டு விளங்கும் அழகிய பல்வரிசையோ முல்லையரும்புகளாம்; சீர்பரவு ஐ ஆயினாள்—(சீர்-இலகுமியும், பரவு-விரும்பும், ஐ-அழகு, ஆயினாள்-உடையவர்) இலகுமியும் விரும்பும் அழகுடையார்; திருவுருவு இன மென சாயல்—கண்டாரால விரும்பப்படும் தன்மை நோக்கமுடைய இவரது உருவத்துடைய இனிய மெல்லிய சாயலின்; ஏர்பரவை இடைப்பட்ட-அழகிய பரவுதலிடைப்பிலகப்பட்ட; என ஆசை எழுபரவை-ஈ(ழ)ம் விருப்பமானது எழுகடல போன்றதா.

இத்தகைய அழகிய செய்யுட்களையும் உரை நுட்பங்களையுஞ் சுவைத்தின்புற நாமெல்லொருவரும் நம்மிடத்துள்ள ஆசையை எழுப்புவோமாக.

---

## அறிவித்தல்

இதுகாறும் விசுவநாதபிள்ளை இராசையா என வழங்கிவந்த எனது பெயரை இனிமேல பிறப்புச் சாட்சிப்பத்திரத்தில் உள்ளபடி விசுவநாதபிள்ளை—சேதுகாவலர், என வழங்கிவருவேனென்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

வி. சேதுகாவலர்

சரவணை
Kayts
28-11-43

Mis 170 29-11.43&2-12-43.

# இன்பம் எங்கே?

K. V. ராசன் மேல்கரவை

இன்பவாழ்வெய்த வேண்டுமென்பது மக்களின் எண்ணம்; எண்ணியாங்கெய்தல் மிக அரிது. அரிதெனினும் விரும்பி முயற்சிப்பதே உலகியல்பு. இந்த இயல்பு என்னை நழுவ விடுமோ? யானோ பரம ஏழை. பிறந்தகாண்முதலா இன்றுவரையும் இன்பம் என்பது எனக்கில்லை. பாடசாலைப்படிப்பி லீடுபட்டு வருங்காலங்களிலே கல்வியில் முதன்மையானபோக்கு இருந்திருப்பினும் இன்பத்தை அனுபவித்திருப்பேன. அதுவுங் கைகூடவில்லை. ஏதோ பூர்வ புண்ணியமாகக் கல்விச் செல்வம் அருட்செல்வமுடைய பிதாவின் மகனானேன். அதனால் ஆலயவணக்கம் இளமையிற் றொடர்பு பட்டுவிட்டது. கல்வியிலென்னை ஊக்க முயற்சித்தலே அப்பனின் முயற்சி. சித்தாந்த உணர்ச்சி உடையவர் ஆன்மையின் பற்பல நல்ல விஷயங்களை என்னுடைய பண்பாடில்லாத அகவயலுள் விதைத்தார். இச்செயல் என்றுந் தவறாமல் நடந்து வந்தது. இவற்றால் எனக்கு எப்படி இன்பம் வரும். பணமில்லை. காணியில்லை. நன்கு மதிப்பில்லை.நான் ஒருவன்தான் இவ்வுலகில இன்பமற்றவன் என்பது என்னுடைய துணிந்த எண்ணம். நாளடைவில் உணர்வூட்டுஞ் சிற்சில நூல்களை என் பண்பில்லா மன அமைதிக்கேற்ப நல்லாசிரியர்களிடம் படித்தேன். ஏழையென்றெண்ணியோ? அறியேன்; நம்மூரிலுள்ள கல்விச்செல்வம் அருட்செல்வம் நிறைந்த மக்கள் என்னுடன் அகத்தொடுபட்ட முகமலர்ச்சியோடும் உரையாடுவர்.

நமது கிராமத்திலுள்ள ஐங்கரன் கோயிலுக்கு வணக்கங்காரணமாகப் புக்க எனக்கு அழகியார் ஒருவரின் காட்சி கிடைத்தது. கண்டதும் என்னுடம்பு வியர்த்தது. கண்ணீரால் ஊற்றெடுத்தது. உடனே எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. காரணமின்றிக் கண்கள் நீர்விடுகின்றன என்பதே சிரிப்புக்குக் காரணம். சிரிப்பும் மனத்தொடுபட்டதன்று. அவருடைய அழகின் தன்மை என்னால் கூறமுடியாது. அக்குமரனை உடம்பிலங்கின்றன. கொவ்வைச் செவ்வாயிற் சிரிப்புக் குமுறுகின்றது. ஆல் உடம்பில துவளுகின்றது. இவ்வாறான கோலத்தைக் கண்டதும் பாதங்களில் வீழ்ந்து வணங்கினேன. உணர்வொழிந்தது. அப்பால நடந்தது எனக்குத் தெரியாது. அப்பெரியார் கை முகத்தைத் தடவி எழுப்ப சில வார்த்தைகள் செவியில் விழவே விழித்தேன். மயக்கம் நீங்கிற்று. என்ன அதிசயம்; சுவாமி, தங்கள் வரலாறுமைக் கூறியருளல் வேண்டும். உடம்பால் என்னெஞ்சுருகுவது எத்தன்மையது எனும்படி உருகத் தொடங்கிவிட்டது என்று கூறிநின்றேன.

(அழகியார்) தம்பி, யான் பிராமண குடும்பத்தவன், அரச குடும்பத்தில் ஸ்வீகார புத்திரனாக வளர்ந்தேன். பொருளிருந்தென; காணிபூமியிருந்தென; அட்டைஸ்வரியங்களிருந்தென; யானுற்ற துன்பங்களை சொல்லமுடியாது. என் மனஞ் சுழலத் தொடங்கிவிட்டது. அரச குடும்பத்தில் வளர்ந்த பிள்ளைக்கு என்ன துன்பம், என் எண்ணம் தறுகுமாறுபோல நகருகின்றதே என்று அலைகள் மோதத் தொடங்கின.

விவாக மண்டபந்தான் ஒருவனுக்கு ஐம்பிறப் பிரவேசதானம். அந்த இடமும் எனக்கு ஆழ்ந்த துன்பக்கடலாய்விட்டது. மணமகளை மணவறையிற் கண்டதுதான். கைப்பிடிக்கவுமில்லை. என்வழிமுறையோரின் சாதனப்படி எங்கள் குலமுதியோருக்கு அடிமையானேன். என்னைக் கூலிகொண்டவன் சாதாரண பேர்வழியல்ல மணமகள் நிலைமை என்னவோ அறியேன். (அதிசயமும் அச்சமும் எனக்கு) அந்த முதலாளிக்கு ஊர் ஊர்தோறும் மனையுண்டு. அங்கெல்லாம் போவது என் வழக்கம். மணவறையில உரிமையை இழந்த நான் தாசியர்போலானேன். அவர்வசப்பட்டபடியால ஒழுங்காளும் சத்தியந் தவறாத என்னுடைய நா நிலைகுலைந்தது.

('அழகியாரின் பேச்சு நின்றுவிட்டது) உடனே யான் அவருடைய கண்மலர்களைப் பார்த்தேன். குவிந்திருந்தன. (சந்திரனுக்குஞ் சந்திலே மறு என்பது பழமொழி) கலக்கம்மீதூர அடிகளை நோக்கி, சுவாமிகாள்! தேவரீருக்கு நேர்ந்ததென்ன! கண்கள் மலரக் காணேன். பிறப்பிலமைந்தனபோன்றுங் காணேன். ஈதென்ன விந்தை! இதன் காரணத்தை அறியுமாவலெனக் குண்டு என்றேன். இந்நிலைப்பொழுதும் என்னுடைய கண்கள் அழகரின் கண்மலர்களின் நிலையை நோக்காதபடியால் தானேயென் றெண்ணுவதற்கிடையில் கவலைகடலாழ்ந்தேன். என்காதுகளினூடே வந்தோர் கனிந்தொழுகும் ஓசைகேட்டது. நீர் மட்டத்தில் வந்து பார்த்தேன். என்ன பரிதாபம்! என்பக்கல நோக்கிநின்ற உருசனின் நேர்முகமாய் விட்டது. ஒருகையில் விளங்கிய ஊன்றுகோல், மகவு தாங்குவோர் நிலைபோல மார்பணைட இருகைகளினாலும் ஏந்தப்படுகின்றது. இசைமயமான சொரூபம்.

"விண்ணுள்வார் முதன்மை மிக்க
பெருவிடமுண்ட
கண்ணார் கச்சியே கம்பனே
கடையானேன்
எண்ணாத பிழைபொறுத்திங்
கியான்காண எழிற்பவள
வண்ணாகண் ணளித்தருளாய்...."

என்ற விதமாக அருளுரு அருளிற்று. பின்னர் வீழ்ந்து வணங்கினார். எழுந்தார். இடக்கண்ணைத் திறந்துவிட்டது. விலாவிறச் சிரித்தார். ஆனந்தத் தாண்டவமாடினார். என்ன அதிசயமென்றெண்ணித் திகைக்குமென் முகம்நோக்கி மலர்ந்த முறுவலும் போகுங் குறிப்புங்காட்டி அப்பாற் போய்விட்டார்.

ஆலயவணக்கத்திற்கு வந்த எனக்கு இந்தக் காட்சி தென்பட்டதென்னமாய மென்றெண்ணி உன்னேபோய் வழக்கம்போல வணங்க ஆரம்பித்தேன். அன்பத்திலாழ்ந்து நின்ற அழகியார் பாமாலை புனைந்து விடுத்த பெற்றுப் போமாறு அருளுகின்ற கருணைநீ, என்னையுமினப நுகர்க்க லயக்குந்தாமோ வென்றெண்ணிக் கசிந்து வணங்க விரும்பினேன். கருங்கல மனம் பஞ்சப்புலன்களுந் தஞ்சம் போக்கு. ஒருமைவழியில்லை. வீடுதிரும்பினேன். ஆறாத யோசனை. வாடிய உள்ளம். வழியில் என்னுடைய மாமனார் ஒருவர் தென்பட்டார். உறவுடன் உதவிசெய்யும் இயல்பினர். கண்ணப்பர்போன்ற உறைந்த பக்தியுடையார். என்னைக் கண்டதும் தம்பி ஒரு காட்சி கண்டேன. ஒரு அழகிய சிறுவர். பிராமணர்; நானவரும் வழியிலுள்ள கோயில

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# மாதோட்டமும் நாகர்களும்

யாழ்ப்பாணம் "நாவலர் கோட்டத்து"
திரு. வை. முத்துக்குமாரசுவாமி அவர்கள் கொழும்பு வானொலி நிலையத்தில் 24-10-43 அன்று நிகழ்த்திய வானொலிப் பேச்சு.

[ விசேடக் குறிப்புக்களுடன் 'இந்துசாதன'த்துக்கு உதவப்பெற்றது ]

(முற்றொடர்)

மாதோட்டம் பண்டைக்காலத்தில் செல்வாக்குள்ள பட்டணமாகவும் துறைமுகமாகவும் இருந்தது 11 இங்கு உரோம-கிரேக்க-யவன-பாரசீக-அராபிய, இந்திய சீன வர்த்தகர்கள் தம் மரக்கலங்களோடு வந்து யானைத்தந்தம் முத்து, இலவங்கம், அறுவை, இரத்தினங்கள் முதலியன பண்டமாற்றம் செய்து செல்வர். சில வியாபாரிகள் குதிரைகளை ஏற்றிச் சென்றனர்.

மாந்தைத் துறைமுகத்தில் ஓர் அழகான அற்புத வலிமையான காந்தக்கோட்டை இருந்தது என அறியக்கிடக்கிறது. மாலுமிகள் திசைக் கருவிகளைக்கண்டு பிடிக்க முன்னரே இத்துறைமுகம் நாகர்களின் சிறந்த நகரமாக விளங்கியது. இக்கோட்டை விஸ்வகர்மாவால் கட்டப்பட்டது எனபர்; இது சிற்பத்தில் வல்லதபதிகளால் அமைக்கப்பட்டது. 13 அக்கோட்டையில உள்ள பொறிகள, பகலில் 'சூரிய' 14 காந்தக் கலலாலும், இரவில 'சந்திர' காந்தக்கலலாலும் 15 மன்னார்க்கடலில் சென்ற கப்பலகளை தம்மாட்டிழுத்துக்கொள்ளும் சக்தியுடையன. கோட்டையின் மாடியல் அழகிய மாதர்கள் இருந்தனர்; அங்கு வந்த சப்பற்காரர்களை அவ்வனிதைகள் வசியப்படுத்தினர். அவ்வாறு இவர்கள் ஏமாந்து இருக்கும்பொழுது நாகர்கள் கப்பல்களை கொள்ளையடித்தனர். 16 இது ஒரு கன்னபரம்பரை இன்னும் உண்டு* 17 இக்கோட்டை கலிசய மன்னனால் அழிக்கப்பட்டது என்று ஹியூன் திசாங் என்னும் சீன ஆசிரியனால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 18 இந்நகரம் சோழரால் அழிக்கப்பட்டிருக்கலாம். 19 இதைப்பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியத்தில உண்டு என புராதன யாழ்ப்பாணத்தில் முதலியார் இராசநாயகம் அவர்கள் எடுத்து விளக்கியிருக்கின்றார்.

மாதோட்டப் பகுதியில் கி. மு. பத்தாம் நூற்றாண்டிலும் அதன் பின்னும் ஆண்ட குளோடியஸ், அன்ரோனீ முதலிய உரோமச் சக்கரவர்த்திகளின் பொற்காசுகளும், வெள்ளிக் காசுகளும் இன்றும் கண்டெடுக்கப்படுகின்றன. இதனால் இத்துறைமுகத்தின் பழமையும் சிறப்பும் உறுதிப்படுத்தப்படும். மாதோட்ட நகரின் அழிவுகள் இவை; கற்றூண்கள், செங்கற்கள், ஓடுகள், மணிகள், உடைந்த வளையங்கள், பதக்கங்கள், பிற ஆபரணங்கள், கண்ணாடித் துண்டுகள் முதலியன. மாந்தையின்னும் மாகமம் வரைக்கும் முற்காலத்தில ஒரு பெரிய வீதி இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள.

நாகர்கள் என்பவர்கள் அவைவாசிச சர்ப்பங்கள் என்றும்; மந்திர சக்தி யுடையவர்கள் என்றும்; பாதாளலோக வாசிகள் என்றும் பழைய புலவர்கள் பகர்ந்திருக்கின்றனர். நாகர்களின் நாகரிகத்தைத் திரு. வி. கனகசபைப்பிள்ளை அவர்கள் "பதினெண்ணூற்றாண்டுகளுக்கு முன் இருந்த தமிழர்" என்னும் நூலில் ஆராய்ச்சி செய்திருக்கின்றார். அவர் கூறும் விஷய சாரத்தின் ஒரு பகுதி இது. பின் தக்கண தேசத்தைப் படையெடுத்த ஆரியர், நாகர்களிடம் இருந்த எழுத்து எழுதுவதைக் கற்றனர். ஆகவே சம்ஸ்கிருத எழுத்து தேவநாகரி எனப்பட்டது. நாகர்கள் திராவிட கணத்தைச் சார்ந்தவர்கள் என்பது 20 இக்காலத்துச் சரித்திர ஆராய்ச்சியாளர்களின் முடிபு. இயக்கரிலும் பார்க்க நாகர்கள நாகரீக, ஏணியில பல படிகள் உயர்ந்திருந்தனர். அவர்கள பலதிறப்பட்டவர்கள; மறவர், எயினர், ஒளியர், ஓவியர், அருவலர், பரதவர் முதலியோர் நாகர்களின் கிளைச் சாதியார், நாகர்கள் நெசவு செய்வதில் புகழ்படைத்திருந்தனர். அவர்களால் செய்யப்பட்ட மஸ்லின் துணியை 21 உரோம கிரேக்க தேசத்து மாதர்கள விசேஷமாக மதித்துவந்தனர். தமிழர்களின் விறைத்த பகைவர்கள மறவர்கள். மறவர்கள காளியின பலிபீடத்தில தமக்கு களவுக்கு உதவி செய்வதற்கு எருமைகளைப் பலி கொடுத்து வந்தனர். பட்சி சாஸ்திரம நன்கு பயின்றிருந்தனர் இவர்கள. எயினர் எனப்படுவோர் சட்டதிட்டங்களை முற்றும் புறக்கணித்தனர். கால்நடைகளை களவாடல், கொள்ளை, கொலை முதலியனவே இவர்களின் முக்கிய சீவியமாக இருந்தன. ஓவியர், ஒளியர் என்போர் கைதேர்ந்த சிற்பிகளாக விளங்கினர். இவர்களுள் 1ம் அல்லது 2ம் நூற்றாண்டில் ஒரு சிற்பி இராசகட்டில ஏறி இருந்தான். 22 பரதவர்கள் மன்னார்க்குடாவிலும் சலாபத்திலும் மீன் பிடித்தும் முத்து, சங்கு, சிற்பி முதலியன குளித்தும் வாழ்க்கையை நடத்தினர். கருமீன்களைக் கட்டும் வித்தை இவர்களுக்குத் தெரிந்திருந்தது. அருவை நாட்டில் வாழ்ந்தவர் அருவலர் எனப்பட்டனர். எயில் பட்டினத்தில் வாழ்ந்தவர்கள் ஓவியர் எனப்பட்டனர்.

நாக கன்னிகைகள் பலரை சேர-சோழ-பாண்டிய மன்னர்கள் மணஞ்செய்தனர். கிள்ளிவள்ளவன் என்னும் சோழமன்னன் நாகநாட்டு மங்கையைக் காதலித்து வதுவை செய்த வரலாறு மணிமேகலையில் 24ம் அத்தியாயத்தில காணப்படுகிறது. விசய மன்னன் காலத்துக்கு சுமார் ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னரே 23 (கி. மு. 13 நூற்றாண்டுகளுக்கு முன்னமே நாகர்களாகிய திராவிடர் மாதோட்டத்தில் தமது ஆசிபத்தை நிலைநாட்டியிருந்தனர். நம் தீவின் வடமேற்கில உள்ள மன்னார்க்குடாவின சங்குகளும், முத்துக்களும் தமிழரை ஈழத்துக்கு இழுத்தன. இன்றேன்று: திருக்கேதீச்சுவரம், தண்டேஸ்வரம், முன்னேச்சுரம் முதலிய அதிக பழமையுள்ள தலங்களும் தமிழருக்குக் காதற்பொருட்களாக இருந்தன. 24 மாதோட்டம் என்ன அழிந்துகிடக்கும் கிராமந்தானே! என்று பலர் நினைக்கக்கூடும். ஆயினும அநுராதபுரம், பொலநறுவையிலும் பார்க்க இது சரித்திரப் பழமை வாய்ந்தது. நமது நாட்டின் பழைய ஊர்களின் வரலாற்றை ஆராய்ச்சி செய்து வருதல் ஒவ்வொரு தேசாபிமானியின் கடமையாகுமன்றோ!

---

11 7-ம் நூற்றாண்டில் இருந்த சுந்தரமூர்த்திநாயனார் செய்த தேவாரத்தில் பின் வரும் செய்யுள் இதைப்பற்றிக் குறிக்கின்றது:

"அங்கம் மொழியன்னார் அமரர் தொழுதேத்த, வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில், பங்கஞ் செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல், செங்கண் அரவசைத் தான் திருக்கேதீச்சரத்தானே'

16 Ancient Jaffna Chap. I, Mud. C. Rasanayagam

* மாந்தையில் காந்தக் கோட்டை ஒன்று இருந்தது, அங்குள்ளார் பகற்காலத்தில் சூரியகாந்தியைக் காட்டியும், இராக்காலத்தில் சந்திரகாந்தியைக் காட்டியும் பகைவர்களை அதோகதியாக்கினர். பகைவர் தலைவன் பர்த்தலஹரி என்பவன் இக்கோட்டையின் இரகசியங்களை அறிய விரும்பிப் பின் வரும் உபாயத்தைக் கையாண்டான். அக்கோட்டைக் கருகில் சில மாதர்களை உளவுபார்த்துச் சொல்லும்படி ஏவினன். அவர்கள் அங்கே அவ்வாறு வாசஞ்செய்தனர். மாந்தைக் கோட்டை மர்மம் அறிந்த இளமையான கம்மாளன் ஒருவன் இப்பெண்ணுள் ஒருத்தியைக் கண்டு மோகித்து அவளுடன் இருந்தான். நள்ளிரவில் இவள் "கோட்டை தீப்பற்றிக் கொண்டதே" என்று கூக்குரல் இட்டாள். அவளுடைய காதலன் துடுக்கிட்டு "வாகு வைக்கோலைப் போட்டுக் கொளுத்திவிட்டார்களோ" என்கிற இரகசியத்தை சூதுவாதில்லாமல் கூறி எழும்பினன். அவ்வனிதை அவனைத் தான் பரிகாசஞ் செய்ததாகச் சொல்லி ஆலிங்கனஞ்செய்து உறங்கினள். பின்னர் கோட்டை அழிக்கப்பட்டது. கம்மாளர் சீனுவுக்குச் சென்றனர். இதுவே கம்மாளருக்குள் வழங்கிவரும் கன்னபரம்பரை. "மக்கத்துச் சோனகரும் மாந்தைக் கம்மாளரும்" தொடர்புள்ளவர் என்பர்.

17 சித்தூர் அதாலத்து கோர்ட்டுத் தீர்ப்பு என்னும் நூலில் கண்டுள்ளது இது;

18 Indian Antiquary Vol. XLVI. p. 72

19 Ancient Jaffna Mud. C. Rasanayagam

20 (a) See Tamilian Antiquary Living Races of Mankind by (Prof. Keane)
(b) See Parker's Ancient Ceylon.

21 Ancient Jaffna--Page 135 by Mud. C. Rasanayagam

22 நற்றிணை:

"மாந்தையிலே வாழு மருடக்கியாகியனக், கேக்கு தழும்பேடா விரண்டுண்டு —வேந்தர், முடித்தழும்பு காலிலே முத்தமியோர்க்கும், படித்தழும்பு கையிலே பார்"

23 Ancient Jaffna by Mud. C. Rasanayagam

24 ஈழமும் தமிழ்ச்சங்கமும்—க. முத்துத்தம்பிப்பிள்ளை, Tamilian Antiquity Vol. I.

# பண்டைத்தமிழரின் சமயம்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

(முற்றொடர்)

முத்திப்பேறு சாமானியர்களால் சுலபமாக அடையக்கூடிய தன்றென்பது இந்துக்களின் துணிபு. ஒரு பிறப்பில் சித்திக்கத்தக்கதன்று. அதற்காக இடைவிடாது மிகவும் கஷ்டப்படவேண்டும். இப்படிப் பல பிறவிகளிற் சரியை யாதி புரிந்தால் கடவுளைக் காணலாம். இப்போது நாமுள்ள நிலையானது உலகத்தோடு மிகுதியும் பற்றுடையது. நமது கவனமெல்லாம் உலகப்பொருளிலேயே நாடியுள்ளது. இவ்வுலகப்பற்றை யொழித்துச் சிறிது சிறிதாகக் கடவுட்பக்தி அல்லது சித்தறிவு பெருகுவதற்கு வழிதேட வேண்டியதாயிற்று. இதற்கு ஒரு வழி பெறுவெனின் இவ்வுலக இன்பத்தை நுகர்வதற்குக் கடவுள் அருளை வேண்டுதலாம். இவ்வுலகின்கண் யாம் அனுபவிப்பவை பல இன்பதுன்பங்களுக்கு உரிய பொருள்கள் மிகப்பல. அனுபவத்திற்குரிய பொருள்கள் ஒவ்வொன்றிலும் கடவுளின் சித்சக்தியைக்கண்டு அதன் விளக்கமின்றி யாம் ஒன்றையும் நுகர முடியாதென்னும் உண்மையை உணருகிறோம். நமது செய்கை ஒவ்வொன்றிலும் கடவுளின் சக்தியைக் காண்கின்றோம். நாம் உண்ணும்போதும் அவருடைய கருணையை நினைக்கின்றோம். யாம் வேலை செய்யும்போது ஆயுதங்களில் அவர் வியாபித்திருப்பதாகப் பாவிக்கின்றோம். நாம் படிக்கும்போது புத்தகங்களில் அவர் எழுந்தருளியிருப்பதாகக் கருதுகின்றோம். இந்துக்கள் சித்துணர்ச்சியில் பெரிதும் கைதேர்ந்தவர்களாகையின் இச்சடப்பிரபஞ்சம் சித்துப் பிரபஞ்சத்தோடு இணைக்கத்தக்க தென்பதை கண்டறிந்துள்ளனர். இவ்வுலகத்துள்ள பொருட்களிற் சில மற்றவைகளிற் சித்தாற்றல் அதிகமாக வுடைமையின் அப்பொருள்களை இந்துக்கள் பாராட்டிப் போற்றலாயினர். சாளக்கிராமம், வலம்புரிச் சங்கு, உருத்திராக்கமணி, முதலியவை தனிச்சிறப்புடையவை. தெய்வசக்தி அவற்றுள் ஒளிர்கின்றது. இக்காரணத்தினால் இப்பொருள்கள் இந்துக்களால் மிகுதியும் போற்றப்படுகின்றன. உலோகாயதர்களுக்கு இப்பொருள்களின் மதிப்புத் தெரியாமையால் அவற்றைத் தப்பாக எண்ணிப் பாராட்டுபவரைக் குறைகூறுகின்றனர். பிரசித்திபெற்று விளங்கிய மனிதர்களின் பொருள்கள் அற்பமாயிருந்தாலும் அவரால் கையாண்டதாயிருந்தால் அவரைச் சேர்ந்தவர்களாலும் பின்வந்தவர்களாலும் காப்பாற்றிப் போற்றப்படுவது யாமெல்லாம் அறிந்ததே. இப்படி அப்பொருளைப் போற்றுவதை யாம் அநாகரிகமென்று தள்ளலாமோ? இதேபோல தெய்வசக்தி பொருந்திய பொருள்களை யாம் மதித்துப் போற்றுவதை அநாகரிக வழிபாடு என்று கூறிக் கழிக்கலாமா!

காலஞ்செல்லச் செல்லப் பழைய நாகரிகம் குறைவது இயற்கையே. எக்காரணத்தினால் சில பொருள்கள் மேன்மையுள்ளவையாகக் கருதப்பட்டன என்பது மறக்கப்பட்டு பொருள்கள் மாத்திரம் போற்றப்படுவதாயின. இதை இந்து வைத்திய மருந்துகளில் நன்றாய்க் காணலாம். நமது வைத்தியர்கள் ஒரு மருந்து ஏன் ஒரு வியாதிக்குகந்ததாகக் கருதப்படுகின்ற தென்னும் காரணத்தைக் கூறமாட்டாத நிலைமையிலுள்ளனர். ஒரு மருந்தைச் செய்வதற்கு உபயோகிக்கும் பல சரக்குகளின் குணத்தை அறியாது அச்சரக்குகள் பிணியுடைய தேகத்தோடு என்ன தொடர்புடையவை அத்தொடர்பின் காரணம் என்ன என்பவைகளைத் தெரியாமலும் உள்ளனர். இந்நிலைமையிலிருந்தும் அவர்கள் வைத்தியம் செய்து வருகின்றனர். அவர்கள் கையாளும் மருந்துகள் அவற்றின் தன்மையைக் கண்டறிந்திருந்த பண்டை முனிவர்கள் மூலபரம்பரை தங்களுக்கு வழி வழியாகக் கிடைத்தமையின், பண்டைத் தமிழர்கள் இவ்வண்ணமாகப் பல பொருள்களைப் போற்றியும் காப்பாற்றியும் வந்தனர். நீர் விசாரியாது அவர்கள் செய்கையைப் பழிப்பது தகுதியன்று. (உலகறிவு கொண்டு)

(தொடரும்)

வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்.

## உலகம்பலவிதக் கதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யை இந்த க்ஷணமே வீட்டிலிருந்து துரத்திவிடவோ, சிங்காரியை இந்த வீட்டு வாசலிற்றானும் அடி வைக்கப்படாதென்று தடுத்துவிடவோ, இல்லையேல் என்பிள்ளையையுங் கூட்டிக்கொண்டு பரதேசம் போய்விடவோ என்று பலவாறு நினைத்து ஆத்திரப்பட்டேன்; ஆனால் சிங்காரி ஆரவாரஞ் செய்வாள், என் பிள்ளையை அநியாயமாகத் தூற்றிவிடுவாள்; அயலட்டத்திலுள்ளவர்கள் அதினால் வசை வைத்துச் சேருவர்; குமர்ப்பிள்ளையின் கருமம் என்று இவைகளையெல்லாம் யோசித்து எனக்குண்டான கோபத்தையும் ஒருவாறு அடக்கிக் கொண்டேன்; பொறுமை கடலினும் பெரிதென்ற பழமொழியை எண்ணினேன்; ஆர் என்ன தீமை செய்தாலும் என் பிள்ளையின் பொருட்டுப் பொறுத்துக்கொள்ள வேண்டியவனுமானேன்; கோபமுந் துயரும் என மனத்தில் மாறி மாறி நிகழ்ந்தன; ஒருவருக்கும் ஒன்றும் பேசாமற் போய் என் படுக்கையறைக்குட் புறப் படுத்துக் கொண்டேன். இரவு ஒன்பது மணிக்கு மேலாய் விட்டது; இதற்கிடையில் என் பிள்ளை நான் படுத்துக் கிடக்கும் அறையுள் வந்து நான் உறங்குவது போற் கிடப்பதைக்கண்டு உறக்கத்தைக் குழப்பவொண்ணாதென றெண்ணிக் கண்டும்போதும் மெல்ல அறையைவிட்டுப் போய்விட்டாள்; சற்று நேரஞ்செல்ல, சிங்காரி அறையுள் வந்தாள்; அவள் வருவதைக் கண்டு நான் கண்களை மூடிக்கொண்டு கிடந்தேன்; அவள் என்னை எழுப்ப முயன்றாள்; குந்தாய், புவனம், நித்திரையாய்க் கிடப்பவனை யெழுப்ப முடியுமே யல்லாமல் நித்திரை போலக் கிடப்பவனையும் எழுப்ப முடியுமா? இரண்டுமுன்று தரம் எழுப்ப முயன்றாள் நான் எழும்பவில்லையென வெண்ணிக்கொண்டு அவள் அடுக்களைப் பக்கம் போய்த் தன் போசனத்தை முடித்துக்கொண்டாள்.

**உண்ணுமல் உறங்கலாமா?**

அவள் வந்து கால்மணிநேரஞ் செல்ல என் பிள்ளை படுக்கையறையுள் வந்து கால்மாட்டில் நின்றுகொண்டு "ஐயா, ஐயா, என்று மெல்லக் கூப்பிடுதலும் நான் துடிதுடித்தெழுந்து "என் செல்வமே என்னடியம்மா? என்று ஆதரவுடன் கவலைபெருகக் கேட்டேன்; "ஐயா, உங்களுக்கு ஏதும் சுகமில்லையா" என்று மெல்ல வினவ, உன அருமையான தாயை இழந்தபின் எனக்கு என்னடியம்மா சுகம். "ஐயா, போனவைகளை நினைத்துக் கவலைப்பட்டு ஆவதென்ன; நாங்கள் புண்ணியஞ் செய்தவர்களாயிருந்தால் என்னைப் பெற்றவள் இன்னமும் உயிரோடு இருப்பாளே" யென்று சொல்லி என் பிள்ளை கலங்க நானும் கலங்க, பின்பு அவள்தான் ஒருவாறுதேறி என்னையுந் தேற்றினாள்; "ஐயா, உண்ணாமல் உறங்கலாமா? உங்களுக்குப் பசியில்லையா; வாருங்கள், வந்து ஏதும் ஆகாரஞ்செய்துவிட்டுப் படுங்கள்" என்று என் பிள்ளை என்னை யழைத்தாள்; 'மகளே, எனக்கு இப்பொழுது பசிக்கவில்லை; நான் சிறிதுநேரம் ஆறுதலாகக்கிடக்க விரும்புகிறேன்; நீ போய் ஏதும் உண்டுவிட்டுப் படுக்கைக்குப் போடியம்மா" என்று என் பிள்ளையை இரந்தேன்; "ஐயா, நீங்கள் உண்ணுமற் கிடக்க, என்னால் எப்படி உண்ண முடியும்? ஏன் ஐயா உங்களுக்கு ஏன் பசிக்கவில்லை" யென்று பின்னருங்கேட்க,

"மகளே, மானங் குலங் கல்வி முதலிய பத்தும் பசிவந்திடப் பறந்து போம் என்று உலகத்திலே சொல்லுவார்கள்; அப்படிப்பட்ட பசியும் பெருங் கவலை வந்தாற் பறந்து போமடியம்மா" என்று நான் சொல்ல, "உங்களுக்கு என்ன கவலை ஐயா" என்று பிள்ளை ஆவலுடன் கேட்க, உன்னைவிட்டுத்தான் கவலை என்று நான் சொல்ல, "ஐயா, முதல் ஆண்டவன் இரண்டாவது நீங்கள் இருக்கும்வரையில் எனக்கு ஒரு குறையுமில்லை, கவலையுமில்லை" என்று என பிள்ளை சந்தோஷத்துடன் எனக்குத் தேறுதல் கூறினாள்; எனக்குவது முண்ணமனமேயில்லை; ஆனாலும், மகளே, நீ பட்டினி கிடப்பாயென்ற பயத்தால் உண்ண ஒருப்படுகிறேன்; வா, கண்ணே, எனக்கும் ஆகாரந்தந்து நீயும் ஏதும் போசனம் பண்ணு என்று சொல்லி அடுக்களைப் பக்கம் போதற்கு எழுந்தேன். "ஐயா, சின்னம்மாள் சற்று முந்தி வந்து கேட்க உண்பதற்கு மறுத்துவிட்டீர்கள்; இப்பொழுது நான் வந்து கேட்க, நீங்கள் உடன்பட்டு வந்து போசனஞ் செய்தால், சின்னம்மாள் உங்களமீதும் என்மீதும் மனஸ்தாபப்படக்கூடும்; ஆனதால் ஐயா, குறைமயனாறுநீர்கள; உங்களை வந்து இன்னுமொருமுறை போசனஞ்செய்யக் கேட்டு அழைத்துப்போகச் சொல்லுகிறேன்; வந்து கேட்டவுடன் போய்ப் போசனம் பண்ணுங்கள்; இந்த ஒன்றைமட்டும் எனக்காகச் செய்யுங்கள் என் அருமையான ஐயா" என்று என் பிள்ளை அழுதழுது சொன்னாள்; என் செல்வமே உன் பொருட்டு நான் அப்படிச் செய்கிறேன்; நீயும் உடன் போசனஞ் செய்; ஆனால் ஒன்று சொல்லுகிறேன், மகளே, கவலைப்படாதே, சிங்காரி செய்யும் வஞ்சனையைக் காட்டிலும் நீ என்மீதுவைத்துள்ள பாசம் என்னுள்ளத்தை அதிகம் வருத்துகிறது என்றேன்; என் பிள்ளை உடனே சிறியதாயிடம் போய்ச் சொல்ல, அவள் வந்து என்னைக்கேட்க, நான் என் பிள்ளையோடு போய்ப் போசனஞ் செய்தேன்; பிள்ளையும் படுக்கைக்குப் போனாள். நானும் என் படுக்கையறையுட் போய்ப் படுத்துக்கொண்டு பலவாறு யோசித்தேன்.

(வரும்)

## தேகவியோகம்

காரைவெட்டியிலுள்ள சரஸ்வதி பெண்பாடசாலையாசிரிய ரொருவராகிய திரு. க. பொன்னையா அவர்கள் தமக்குச் சம்பவித்த நோய் காரணமாக, சென்ற ஞாயிற்றுக்கிழமை (28-11 43) இரவு மனைவி மக்கள் சகோதரர் சுற்றம், சுற்றமித்திரர் மாணவர் முதலியோர் புலம்ப இவ்வுலகவாழ்வை எவரும் காத்திரா வண்ணம் ஒருவினர். இறக்கும் போது வயசு 34. கல்வியறிவு ஒழுக்கம் குணம் முதலியவை பூண்டவர் இவருடைய ஈமக்கிரியைகள் அடுத்தநாள் மக்களால் விதிப்படி செய்யப்பட்டன. இவரது அகால மரணம் பரிதாபமானது; இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

## நன்கொடை

இவ்வாசிரியருடைய ஞாபகார்த்தமாக மேற்படி வித்தியாசாலை மாணவாசிரியர்களால் இந்துசாதனப் பத்திரிகைக்கு நன்கொடையாக உதவிய ரூபா 2 பெற்றோம்.

## இந்தியாவுக்கு ஏராளமானோர் பிரயாணம்

**கிறிஸ்மஸ் பண்டிகைக்குச் சாமான்கள் வாங்கக் கையாளுந் தந்திரம்**

கிறிஸ்மஸ்பண்டிகை நெருங்குவதால் ஏராளமான ஜனங்கள் அடுத்த சில வாரங்களில் இந்தியாவுக்குப் பிரயாணமாவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

வருடக்கடைசியில் விடுமுறைக் காலத்தை முன்விட்டுப் பிரயாணம் செய்பவர்களின் தொகை இவ்வருடத்தில் மிக அதிகமாகயிருக்குமென்று தெரிகிறது. கிறிஸ்மஸ் பண்டிகையின்போது விற்பதற்கு ஷாப்புச் சாமான்கள் கொண்டுவருவதற்கு ஏராளமான ஜனங்கள் இந்தியா செல்கின்றனரென்று சொல்லப்படுகிறது.

இலங்கையைக் காட்டிலும் இந்தியாவிற் சாமான்கள் மிகவும் மலிவாகக் கிடைக்கக்கூடியதாக இருப்பதால், ஆடவர்பெண்டிரும் அநேகம் பேர் இந்தியாவுக்குச்சென்று கிறிஸ்மஸ் பண்டிகைக்கு வேண்டிய சாமான்களை வாங்கி வரவிருக்கின்றனர்.

இந்தச் சாமான்களிற் சில இலங்கைக்குத் துறைமுகவரி செலுத்தாமற் சொந்த உபயோகத்துக்கான பொருட்களாகக் கொண்டுவரப்படுகின்றன. வேறு பல சாமான்கள் துறைமுக வரி செலுத்திக் கொண்டுவரப்படுகின்றன. இவ்விதம் கொண்டுவரப்படும் சாமான்களின் விலைகள இலங்கையில் அதேசாமான்களுக்குக் கொடுக்கவேண்டியிருக்கும் விலைகளைக் காட்டிலும் மிகவும் குறைவாக இருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. விலையுயர்ந்த சேலைகள் இந்த முறைப்படியே இலங்கைக்கு வருகின்றன.

இன்னோரன்ன காரணங்களால் அந்தமாதத்திற் பிரயாணம் செய்ய இருப்பவர்கள் இப்பொழுதே 'டிக்கெற்' பெற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். தமக்குப் படுக்கை வசதி நிச்சயமாகக் கிடைக்கக்கூடியதாக இருப்பதற்கும் பலர் இப்பொழுது டிக்கெட் வாங்கிக்கொள்கின்றனர். கிறிஸ்மஸ்பண்டிகை காலத்தின்போது படுக்கை வசதியுள்ள வண்டிகளை அதிகரிக்கும் உத்தேசம் புகையிரத அதிகாரிகளுக்கு இல்லை. ஆதலால், படுக்கை வசதியுடன் பிரயாணம் செய்யவிருக்கும் பிரயாணிகள் முன்காலத்துடன் டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொள்ளுகின்றனர்.

ஜனங்கள் இவ்வளவு முன்ஜாக்கிரதையுடன் நடந்துகொண்டிருப்பினும் படுக்கை வசதியுடன் பிரயாணம் செய்வதற்கு 'டிக்கட்' கொடுக்கும்படி கேட்டு வந்து குவிந்திருக்கும் மனுக்களை நோக்கும்போது அநேக மனுக்கள் மறுக்கப்பட்டுச் "சாதாரண"மாகப் பிரயாணஞ்செய்ய வேண்டி நேருமென்று தெரிகிறது.

சென்ற இரு வாரங்களிலும் இரண்டாம் மூன்றும் வகுப்புகளில் ஏராளமான பிரயாணிகள் இந்தியாவுக்குச் சென்றிருக்கின்றனர்.

## தேகவியோகம்

காலஞ்சென்ற திரு. வ. முருகேசபிள்ளையவர்களின் பாரியாராகிய இராமாசிப்பிள்ளை நவம்பர் மாதம் 20-ந் திகதி சனிக்கிழமையன்று தமது இல்லமாகிய வேதாரணிய வளவில் 92-ம் வயதில் தேகவியோகமாயினர். இவர் பிரிவாற்றாது வருந்தும் புத்திரராகிய ராவ்ஸாகிப் மு. கதிர்தம்பி, ராவ்ஸாகிப் மு. சின்னத்தம்பி, திரு. மு. இராசரத்தினமவர்களுடனும் புத்திரிகளாகிய ஸ்ரீமதிகள தம்பர் முத்தாச்சி, கந்தையா சுந்தரம், சபாரத்தினம் கம பொன்னம்மா அவர்களுடனும் ஏனைய சுற்றமித்திரர்களுடனும் அனுதாபப்படுகின்றோம்.

## கொழும்பு விவேகானந்த சபை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் குருபூசை விழா நிகழும் சுபானுவருஷம் கார்த்திகை மாதம் ருஉ (20-11-43) சனிக்கிழமை மாலை 5 மணியளவில் மேட்டுத் தெருவிலுள்ள ஷெசபை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமத் விபுலானந்த சுவாமிகள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். சபையின் பூஜாக்கிருகத்தில் முறைப்படி பூஜை நிகழ்ந்தபின் தலைவர் நாவலரவர்களின் வாழ்க்கையையும் அவர் தமிழிற்கும் சைவத்திற்கும் ஆற்றிய சேவையையும் குறித்து ஓர் விரிந்த சொற்பொழிவு நிகழ்த்தினர். வரலாற்று முறையில் தகுந்த ஆராய்ச்சியோடு நாவலர் பெருமான் சரித்திரமொன்று எழுதப்படவேண்டிய அவசியத்தையும் சுவாமிகள் வற்புறுத்தினர். அடுத்துப் பேசிய பண்டிதை பத்மாசனி அம்மாள் இராஜேந்திரா அவர்கள் நாவலர் பெருமான் தம் சிறந்த வாழ்க்கையாலும், போதனாலும் பெரு முயற்சியாலும் நமக்கு ஆற்றிய அருந் தொண்டுகளைக் குறிப்பிட்டார். பின் ஸ்ரீமதி சிவபாக்கியம் சிவப்பிரகாசமவர்கள் சில திருமுறைப் பாடல்களை அன்புகனியப் பண்ணுடன் கேட்போர் உள்ளம் உருகுமாறு ஓதினர். இறுதியில் சபையின் கௌரவ தனாதிகாரியாகும் திரு. சி. நா. சோமாஸ்கந்தபிள்ளை அவர்கள் அன்றைய நிகழ்ச்சிகளில் உதவி புரிந்தோர் யாவர்க்கும் நன்றி கூறியதும் சபையில் குழுமி இருந்த அன்பர்கள் யாவர்க்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. அதன்பின் 7-30 மணி வரையில் தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

## விவாகம்

**தம்பையா—இராசபூபதி**

சென்ற இரவு (1-12-43) 9 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் கைதடி-நுணுவில் திரு. K. முருகேசு அவர்களின் கனிஷ்ட புதல்வரும், அரசினர் அளவைப்பகுதி உத்தியோகத்தருமாகிய திரு. தம்பையா அவர்களுக்கும், நுணுவில் ஆசிரியர் திரு. A. V. நாகலிங்கமவர்களின் புதல்வி திருவளர் செல்வி. இராசபூபதி அம்மாளுக்கும் மணமகனில்லத்தில் விவாகம் விதிப்படி சிறப்பாக நிறைவேறியது. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் முன்னிற்பதாக.

## விவாகம்

**வாமதேவா—மங்கையர்க்கரசி**

சென்ற திங்கட்கிழமை இரவு 12 மணியளவில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் ஆனைக்கோட்டை திரு. கணபதிப்பிள்ளையவர்களின் புதல்வன் திருவளர் செல்வன் வாமதேவாவுக்கும் பொன்னாலை திரு. வே. சு. கதிரவேற்பிள்ளையவர்களின் புதல்வி திருவளர் செல்வி மங்கையர்க்கரசிக்கும் மணமகனில்லத்தில் விவாகம் விதிப்படி சிறப்புற நிறைவேறியது. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பதாக.

## பெயர் மாற்றம்

எனது பெயர் சி. பொ. சின்னஸ்லுச்செட்டியார் அல்லது செல்லையாச் செட்டியார் என வழங்கி வந்ததை இன்றுமுதல் சி. பொ. செல்லையா என்று வழங்கிவருவேனென இத்தால் தெரிவிக்கிறேன்.

சி. பொ. செல்லையா
பெருமாள் கோவிலடி.
யாழ்ப்பாணம்

Mis 178—2.12.43—6.12.43

## கொழும்பு விவேகானந்த சபை

கிழமும் சுபானு வருஷம்கார்த்திகை மாதம் க௨ (24-11-43) புதன்கிழமை மாலை 6-15 மணியளவில் மேட்டுந்தெரு விலுள்ள ஷசபை மண்டபத்தில் திருச்சிறுப்பள்ளியை அடுத்த திருப்பாலத்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத் தலைவராகும் ஸ்ரீமத் சிச்பவானந்த சுவாமிகளும் புதுடெல்லி ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தலைவராகும் ஸ்ரீமத் கைலாசானந்தசுவாமிகளும் 'விவேகானந்த சுவாமிகள் உலகிற்கு விடுத்த செய்தி' என்னும் பொருள்பற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர்கள். சபையின் உப அக்கிராசனராகும் அத்துவக்காத் திரு. க. நடராசா அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

## தேவை.

கொக்குவில் கிழக்கு மஞ்ஞென்மணி அம்மாள் ஆலயத்திற்கு ஓர் பூசகர் தேவை. இதற்கு ஏற்பசம்மேகோக்கமாக மனுப்பண்ணுவோர் தங்கள் மனுக்களை சி அருளம்பலம் பிறக்ரர் கொக்குவில், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு 13-12-43 க்கு முன் அனுப்பவேண்டும். மனுப்பண்ணுவோர்கள் கோவில் வளவிலே குடியிருக்க உடன்படுபவரும் உத்தமபிராமண வமிசத்திற் பிறந்தவருமாயிருத்தல்வேண்டும். கொக்குவிலிற் பிறந்தவருக்கு விசேஷ சலுகை கொடுக்கப்படும்.

சி. முத்துவேலு
சி. நவரத்தினம்
சி. அருளம்பலம்
ரிறஸ்ரிகள்

கொக்குவில்
28-11-43

Mis 169 29-11-43 &2-12-43.

## விளம்பரம்

ஒரு விசேஷ ஆசிரிய கலாசாலைப் பரீக்ஷை 1943ம் ஆண்டு டிசம்பர்மாசம் 23ந் திகதி வித்தியாகர்த்தரால் ஒழுங்கு பண்ணப் பெற்றிருக்கிறது. இராமநாதன் ஆசிரிய கலாசாலையிற் சேர விரும்பும் மாணவர்களுக்கு டிசம்பர் மாசம் 11ந் திகதி காலை 9 மணிக்கு ஒரு நேர்முகப் பரீக்ஷை நடைபெறும். அவர்கள் 1944ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாயிருத்தல் வேண்டும். மாணவர்கள் நேர்முகப் பரீக்ஷைக்கு வரும்போது தங்கள் எஸ். எஸ். ஸி. தராதலப் பத்திரத்தையும் பிறப்புக் கொப்பியையும் கொண்டுவருதல் வேண்டும்.

(ஸ்ரீமதி.) A. மயில்வாகனம்,
பிரதமாசிரியை,
இராமநாதன் ஆசிரிய கலாசாலை,
சுன்னுகம், 30-11-43.

Mis. 176, 2.12-43—6-12-43.

## அவசியந் தேவை

உரும்பராய் ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு மனேஜர் உடனே தேவை, ரூபா 500 பணப்பிணை செலுத்தவேண்டும். ரூபா 40க்குக் குறையாமல் சம்பளம் கொடுபடும். விபரங்களுக்கு 5-12-43க்கு முன் எழுதவும்.

க. வே. சாரங்கபாணி,
கௌரவ செயலாளன்.
உரும்பராய், ஐக்கிய பண்டகசாலைச் சங்கம்.

(Mis. 173, 2.12.43)

# பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. என். சாள்ஸ் பத்திருஜ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 48ம் இலக்கத்திலுள்ள வைத்தியசாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் கலலது.

(Mis. 98. 5.8—31.12.43)

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### வெள்ளி டிசம் 3

காலை 7.45 கீதாரம்பம் † 7.50 தமிழில்செய்திகள் 8 திருச்சிவாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8 30 பாலக்காடு கே கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி பி விசாலாக்ஷி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு

மாலை 5 டி பி விசாலாக்ஷி பாட்டு 5-40 தூான்-ஷீப் 6 பாலக்காடு கே கிருஷ்ணமூர்த்தி பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 காப்பிய மகளிர் 8 திருவாவடுதுறை என் ராஜரத்தினம்பிள்ளை நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 உலகவிவகாரங்கள் 10 இசைவேளை † 10.30 முடிவு.

### சனி டிசம் 4

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 அசோக்குமார் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருக்கோடிகாவல் ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 9 முடிவு.

1 கோமளம் ஸ்ரீனிவாஸ் பாட்டு 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 கதம்பம்† 2 தமிழில் செய்திகள் 2-05 கல்விஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 கோமளம் ஸ்ரீனிவாஸ் பாட்டு 5-40 சோலல் கான்மணிமாலை 6 டாக்க் இசை † 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7.15 குன்றுக்களஞ்சியம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 மதராஸிலுள்ளபடி மதுரை மணிஐயர் பாட்டு 9-15 பங்கஜ் மலலிக் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வியாலோ புல்லாங்குழல் கிளாரினெட் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு டிசம் 5

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 சுந்தர ஓதுவாமூர்த்தி † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி என் கங்காபாய் பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்திலசெய்திகள் 1-40 டி என் கங்காபாய் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05 இசைக் கதம்பம் † 2-30 முடிவு.

மாலை 5 கே எஸ் ஹரிஹரன் பாட்டு 5-40 தேவாரதிருவா 6 வி எஸ் கோமதிசங்கரஐயர் வீணை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 முன்னுக்குப்பின் முரண் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 வி எஸ் கோமதி சங்கரஐயர் வீணை 8-30 கே எஸ் ஹரிஹரன் பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு 9-15 பேபி நூர்யா † 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பைரவ் 10 கணைடிதாஸ 10-30 முடிவு.

### திங்கள் டிசம் 6

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 சூரியனுர் கோயில் கே நாராயணஸ்வாமிப்பிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மன்னுர்குடி கே சூர்யபாய் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 சூரியனர்கோயில் நாராயணஸ்வாமிப்பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 மன்னுர்குடி கே சூர்யபாய் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில்செய்திகள் 7-45 வானெலி வாத்யகோஷ்டி 8 காரைக்குடி சாம்பசிவஐயர் வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இந்தியாவும் சாந்த சமுத்திரமும் வசனம் 10-15 டெல்லி உள்ளபடி 10-45 முடிவு.

## இன்பம் எங்கே?

3-ம் பக்கத் தொடர்ச்சி

வாய்தலில் நின்றார். இருகண்களுங் குருடு. பரிதாபநிலை. ஆலயத்தில் அவரையொழிய வேறு யாருமிலர். தனியே நின்று பாட்டுக்கள் பாடினுர். பாட்டுக்கள் முழுவதும் ஞாபகமில்லை.

"சங்கிலிக்காக என் கண்ணை மறைத்தீர்" (என்றது ஒரு பாட்டின் பகுதி) என்னை வருத்துவது உமக்கு நீதியோ? ஆரூரிலிருப்பாரே! உம்மை நம்பிய எனக்கு இவ்விதமான சூழ்ச்சி செய்தல் சர்வஞ்ஞத்துவமாகிய உமக்குத் தகுமோ! என்றவிதமான கருத்துக்களைக் கொண்டவை அவை அடிகள். இன்னுமொரு பகுதி எனக்கு ஞாபகம். அதையே உனக்குக் கூற வேண்டுமென்பது என் அவா.

"மீளா அடிமை உமக்கே ஆளாய்" "நீர் மகிழ் கோயிலுளீரே"

என்று அப்பெரியார் கூற "உளோம்போகீர்" என்ற ஒரு வாக்குக் கிடைத்தது.

அவ்வாறு கூறிய கடவுள்தான், அன்பர்க்கெளிவருங் கருணைவள்ளல் என்பதை இந்நாள்வரையுமறியாதது எங்கள் தவக்குறையுதான். அழகியார் நீர் வரும் வழியாற்றுன் போனுர் என்று கூறினுர்.

உடனே எனக்கிருந்த நினைவு அலைகள் பெருகத் தொடங்கின. யான் கண்ட காட்சியையுங் கூறி நீங்கள் கண்ட அழகியார்தான் யான் கண்டவரு மென்றேன். கதையை நீட்டிக்காமல வீடு சென்றேன் உணவுண்ண விருப்பமில்லை எங்கே பார்த்தாலுந் துன்பம் பெரியவர் சிறியவரென்று பேதம் பார்க்கமல் துன்பத்தில் இல்லற்போலும் இதற்கேதோ காரணமிருக்கவேண்டுமென்று தந்தையாரிடங் கலந்தேன். அவர்கள் வினைகளு விளைவாயது உடம்பு என்றும், முன்னைய பிறவிகளிற் செய்த வினையின் தொடர்பாலேயே இப்பிறப்பில் இன்பதுன்பங்கள் வருமென்றும் இவைபோன்ற பல அரும்பெரும் விஷயங்களைப் பல நூல்கள் மூலம் மேற்கோள்கள் தந்து விளக்கினுர்கள். விளக்கமுறாதல் குறைவான என் மனதிலே பூரண அமைதி உண்டாகவில்லை.

இந்நிகழ்ச்சிகளின் பின்பு தேவார திருவாசகங்களை படிக்குமார்வம் தலையெடுத்தது. படிக்கலானேன். ஒருநாள் 'கறைமிடறர் அழுக்கு' கறுப்பக் கனியை' என்று தொடங்கும் திருவிசைப்பாவைப் படித்தேன். கானகனை கறம்பனை இசைன்னப் படிக்கட்டுவா னெனமற்றணனியேனை. எண்ணமுந்த வேறோ சில படிகள். பாக்குத்தோடும் மனத்தில் நிகழும் வேதனைகேற பருகுக்கணிய புலன் கொழுடட எழுமலூம்குழுவார் விசுவைமலநீ தொழுகிறணி யயபாலவல்' என்ற திருநீகாவைப் பகுதியைக் கண்டதும் கடவுள் ஆனமக்களைக் கதிய

படித்தவே யிருக்கின்றார். அவரைப் பெறவேண்டுமேயானல் தொழவேண்டுமென்ற உணர்ச்சி வந்தது. யான் தொழுகின்றேன் தானேவன் அகப்படுகின்றாரில்லை என்றெண்ணினேன்.

நின்னையெப்போதும் நினையவொட்டாய் நீ நினையப்புகில்
பின்னையப்போதே மறப்பித்துப் பேர்த்தொன்று நாடுவித்தி
உன்னையெப்போதும் மறந்திட்டுனக் கினிதாயிருக்கும்
என்னையொப்பாருளரோ சொல்லு வாழி இறைவனே.

என்று நாவரசர் பெருமான் முறையிடுமாறு தென்பட்டது. இந்தப் பெரிய ஞானியே இத்தன்மைத்தாவரென்னில் நாயேன் முயற்சிப்பது அவமாமென்று நினைத்தேன். மணிப்பெருமான் வந்து மூடனே! ஏன் மன மழுங்கி மனமுடைகின்றாய். இசை கொலை வழக்குகளுக்குப் பயந்தவர்.

'ஆரொடு நோகேனர்க் கெடுத்துரைக்கேன் ஆண்டநீ அருளிலையானுல் வார்கடலுலகில் வாழ்கிலேன்'

என்று யான் கூற அருள் தக்கார் என்று கூறியருளினர். மனந்தெளிந்து வணங்கினேன். என் வணக்கத்தின் முடிவுகளெல்லாம் பணமுடையருக்கேவண்டும் பலர் மதிப்பெய்தவேண்டும். உத்தியோகம் வேண்டும். என்ற குறிக்கோள்களையே கொண்டனர்.

தேனின் சுவையை யறிந்தானல்லவா அதனை விரும்புவான். வெள்ளிக்கிழமை அந்திப்பொழுது ஈசனைத் தொழும்படி சென்று கோயில் முன்னிலையில் நிற்கும்போதுவிண்மீனை விட்டெடாளிரும் நிலவிளக்குகள் பரப்ப, வாத்தியங்கள் முழங்க, பல அன்பர்கள் தோத்திரிக்க அன்றைக பூரண சந்திரனின் தண்ணென்ற சந்திரிகைகள்போல வதோ ஒரு கவர்ச்சிடைக் காட்டினான்றேனறினேன். ஒருபடியாக மனம் அமைதியாக செல்ல ஐந்தடிக்குக் கர்ப்பூர ஆராதனை நடந்தது.

(வரும்)

## தேவை

ஆங்கிலப் புதினப் பத்திரிகை வேலையும் ஏனைய அச்சுக்கூட வேலைகளுந் தெரிந்த அநுபவம் வாய்ந்த ஓர் அச்சுத்தொழிலாளர் (Compositor) தேவை. மனுச்செய்வோர் தமது வயது அநுபவம் முதலியவற்றேடு சமீபத்திற்பெற்ற நற்சாக்ஷிப் பத்திரங்களும் அனுப்புதல் வேண்டும்.

மனேஜர்,
இந்துசாதனம்.

## விற்பனைக்கு

மருதனமடத்தில் 1¼ லாச்சம் தோட்டநிலம். கீழ்க்காணும் விலாசத்துக்கு மனுச்செய்துகொள்க:.

டக்டர், C. சிவசிதம்பரம்
மார்ட்டீன்றேட்
யாழ்ப்பாணம்,

Mi: 168 29-11-43&2-12-43.

குறைந்த விலையில்
**துணிகள்**
வேஷ்டித்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.
**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**
மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்
பெரியகடை—யாழ்ப்பாணம். K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.
Y 19. 4-3-42——3-3-44

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 2nd December 1943.